திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அவர்களுக்குக் கிடைத்த வாக்குறுதி எனக்கும் கிடைக்குமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : எல்லோருக்கும்தான்.

8. உறுதி மொழிக் குழுவின் அறிக்கை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கையை இந்த அவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

9. அலுவல் வரிசையில் மாறுதல்.

மாண்புமிகு திரு. கே. இராசாமுகமது : தலைவர் அவர்களே, " சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை, அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும் " என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவை முன் உள்ள பிரச்சினை :

" சட்டமன்ற மேலவை விதி 21 (3)-ன்படி இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள ஐந்தாவது இனமாகிய 'ஆளுநர் உரையின் மீது விவாதம்' என்பதை அரசின் சட்ட முன்வடிவுகளை எடுத்துக் கொள்ளுவதற்கு முன் எடுத்துக்கொள்ள வேண்டும் "

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

10. ஆளுநர் உரையின் மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின மீது நடைபெறுகிற இந்த விவாதத்திலே எனது கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு முன், அவைத் தலைவராகிய தங்களுக்கு எங்களுடைய மனக் குறைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது ஜனநாயக அமைப்பு முறையிலே இந்த இரு மன்றங்களும் தங்களுடைய நடவடிக்கைகளை நடத்துவதிலே இதுவரையில் பேணிக் காப்பாற்றி வந்த மரபுகள் காக்கப்பட வேண்டும் என்பது இந்த அவையிலுள்ள எல்லோருடைய கருத்து. அது காப்பாற்றப்படவில்லை என்பது என்னுடைய குறை. காரணம் 8ஆம் தேதி ஆளுநருடைய உரையின் மீதான விவாதம் முடிந்து மற்ற நடவடிக்கைகளைக் கவனிக்க வேண்டிய நிலையில் இருக்க